Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 221 /2021

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகராஜ் | Father/Husband Name | : பரமன் |
| Age | : | Calling | : |
| Date | : 09.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09 day of 03.2026.

**Witness appeared through VC on Microsoft Teams virtual Platform on link shared from court**
**Staring Time: 04.00 P.M**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது சேலம் மாநகரம் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன், 23.06.2021ம் தேதி காலை 08.00 மணிக்கு மதுரை மாவட்டம் கீழவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கண்ணாபுரத்தை சேர்ந்த பெரியகருப்பன் மகன் ஆண்டிச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துபூர்வமாக கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 203/2021 பிரிவுகள் 294(b), 323, 324, 427, 506(2) இதசன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், அன்றைய தினம் காலை 09.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கோவிந்தராஜா மற்றும் பாக்கியம் முன்னிலையில் பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( அந்த மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**

அதன்பின்னர் **சம்பவ இட** சாட்சிகளான ஆண்டிச்சாமி,

பழனிமுருகன், பாப்பா, முனியான்டி, ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே 13.00 மணிக்கு எதிரி சுரேஷ் என்பவரை மேலூர் சந்தைபேட்டை அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இதன்பின்னர் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் இவ்வழக்கின் முதல் கட்ட விசாரணையை முடித்து எனக்கு பின்னர் வந்த சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவரிடம் தொடர் விசாரணை வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கில் காயம்பட்டதாக சொல்லப்படும் பழனிமுருகன் என்னிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த ஆண்டிசாமி தனது புகார் மனுவில் தனக்கோ, தன்னை சார்ந்தவர்களுக்கோ காயம் ஏற்பட்டதாக புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் ஆண்டிச்சாமிக்கு புகார்மனுவிலோ, அல்லது எனது விசாரணையிலோ எந்த இடத்தில் காயம் பட்டது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆண்டிச்சாமியை அடித்து கீழே தள்ளியதாக சொல்லியுள்ளார், எந்த இடத்தில் காயம் என்று சொல்லவில்லை. நான் காயம்பட்டதாக சொல்லப்பட்ட சாட்சி பழனிமுருகனை விசாரணை செய்ததாக எதுவும் இல்லை என்றால் சரியல்ல, விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன், சாட்சி பழனிமுருகனை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் மேலூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். நான் சாட்சி பழனிமுருகனை நேரடியாக சென்று மருத்துவமனை சென்று விசாரித்தேனா, அல்லது விபத்து பதிவேடு மூலம் விசாரித்தாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அரசு

மருத்துவமனையில் வைத்துதான் விசாரித்தேன். நான் விபத்து பதிவேட்டை பார்வைிட்டு அதன்பின்னர்தான் பழனி முருகனை விசாரித்தேன் என்றால் இல்லை.

2) என்னிடம் கொடுக்கப்பட்ட புகார்மனுவில் இரண்டு நபர்கள் கல், மற்றும் கம்பால் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் புகார் மனுவில் அந்த பிரச்சனை வீடியோ பதிவு செய்த எனது மகள் காவியாவை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாக எதிரிகள் கூறியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது மகளை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆண்டிச்சாமியின் மகளை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதிலிந்து 15 மணி நேரம் கால தாமதமாகவே என்னிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான சிறப்பு காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் பழனிமுருகன் எங்கள் காவல் நிலையத்திற்கு வந்ததாக எனது விசாரணையிலோ, அல்லது முதல் தகவல் அறிக்கையில குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

3) அதேபோல் எனது விசாரணையில் காயம்பட்ட பழனிமுருகன் ஒரு போக்கு வண்டியில் சென்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் எனது விசாரணையில் எந்த ஒரு சாட்சியும் காயம்பட்ட பழனிமுருகனை தாங்கள் அழைத்து சென்று அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கில் செருப்பால் அடித்ததாகவோ, இரு சக்கர வாகனத்தை சேதப்படுத்தியதாக எந்த சாட்சியும் எனது விசாரணையிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ சொல்லவில்லை

என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கில் எனது விசாரணையிலோ, முதல் தகவல் அறிக்கையில் ஆண்டிச்சாமியின் மகளையோ, அல்லது மனைவி சங்கிதாவை அடித்து காயம்படுத்தியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) இவ்வழக்கில் சம்பவத்தை விலக்கிவிட்ட சாட்சி பாப்பா என்பவருக்கு சம்பவத்தின்போது வயது சுமார் 65 வயது இருக்கும் என்றால் சம்பவத்தின் போது வயது 62 இருக்கும், பட்டியல் சாட்சி பாப்பாவிற்கு சம்பவத்தில் எதிரிகள் தாக்கியதனால் காயம் ஏற்பட்டதாக தெரியவந்ததா என்றால் இல்லை. அதேபோல் எதிரிகள் சேதப்படுத்தியதாக சொல்லப்படும் கடையில் இருந்த பொருட்களை கைப்பற்றி அதற்கான மதிப்பீடு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் புகாரிலும், எனது விசாரணையிலும் சேட்டு என்கின்ற கண்ணன் மற்றும் சுரேஷ் ஆகியோர்களை மட்டும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி முனியான்டி என்பவர் எனது விசாரணையில் ஆண்டிச்சாமியும், அவரது மனைவியையும், எதிரிகள் கையால் அடித்து தள்ளிவிட்டதாகவும், அங்கிருந்த ஊர்க்காரரர் சத்தம்போட்டு அனுப்பிவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆண்டிச்சாமி, பழனிமுருகன், பாப்பா, முனியான்டி, பாக்கியம், கோவிந்தராஜ் ஆகியோர்களை தவிர அந்த ஊரிலிருந்தவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், சாட்சி பழனிமுருகன் புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கில் சம்பவத்தின்போது பயன்படுத்தியதாக ஆயுதத்தையோ அல்லது அங்கிருந்த ரத்தம்படிந்த கல்லு அல்லது கம்பு ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேனா என்றால்

இல்லை. நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் இதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை, எதிரியால் காயம்பட்டிருந்தால் அவரே காவல் நிலையம் வந்து புகார் கொடுத்திருப்பார், இல்லையென்றால் நானே வாக்குமூலம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. எனது விசாரணையில் புகார்தாரரோ, அல்லது காயம்பட்டதாக சொல்லப்படும் நபர்களோ அல்லது இவ்வழக்கின் மற்ற சாட்சிகள் சம்பவத்தின் போது எடுத்த வீடியோ, அல்லது புகைப்படம் இருப்பதாகவே அல்லது கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை, சாட்சிகளை புகார்தாரர் ஆண்டிச்சாமி சொல்லி நான் ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) நான் 2ம் எதிரி சுரேசை சந்தைபேட்டை அருகே வைத்து கைது செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சந்தைபேட்டை எனது காவல் நிலைய எல்லைக்குட்பட்டதல்ல என்றால் சரிதான். அவ்வாறு எனது காவல் நிலையத்தின் எல்லைக்கு உட்படாத இடத்தில் கைது செய்வதற்கு அனுமதி ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. அதேபோல் அவரை கைது செய்து எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தேன் என்று கைது குறிப்பாணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எதிரியை காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து காவல் நிலையத்தில் வைத்து கைது செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, நான் சாட்சிகளை சரி வர விசாரணை செய்யாமல், இவ்வழக்கின் புகார்தாரர் துணை தலைவர் என்பதனால் எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல